LIBRARY, STATE LEGISLATURE
26 FEB 1964
MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Tuesday, 19th November 1963.

The House met in the Assembly Chamber, *Fort St. George,* at nine of the Clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

கிராமத் தொண்டர் படை.

* *226 கேள்வி.*—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கிராமத் தொண்டர் படையினர், பத்தாயிரத்துக்கு அதிகமான மக்களைத் திரட்டி, ஒரு நாள் சிரமதானம் செய்ய வைத்தது உண்மையா?

(இ) அப்படியானால் எந்த ஊரில்?

(உ) அவர்கள் சிரமதானம் மூலம் எத்தனை ரூபாய் உழைப்பைக் கொடுத்தார்கள்?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) & (இ) தஞ்சாவூர் மாவட்டம், கோட்டூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியிலிருக்கும் 47 பஞ்சாயத்துக்களிலுமுள்ள 15,000 கிராமத் தொண்டர் படையினர் குலுவத்தூர் 7/6 மைலிலிருந்து இடைச்சி மூலை 11/6 மைல் வரை சாலையை அகலப்படுத்தும் பணியில் பங்கெடுத்துக் கொண்டனர் என்பது உண்மைதான்.

(உ) அவர்கள் அன்று செய்து முடித்த பணியின் மதிப்பு சுமார் ரூ. 21,630 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. (உழைப்பு வகையில் ரூ. 15,000, பண்டவகையில் ரூ. 2,880, தொண்டர் படையினருக்கு உணவு வகையில் ரூ. 3,750.)

(*a*) & (*b*) It is a fact that more than 15,000 able bodied men drawn from village volunteer force in all the 47 Panchayats of the Kottur Panchayat Union area in Thanjavur district participated in the task of widening the four mile road commencing from Kuluvathur (7/6) to Edachimoolai (11/6).

(*c*) The total value of the work turned out on the day is reported to be about Rs. 21,630 (Rs. 15,000 by way of labour, Rs. 2,880 by way of kind and Rs. 3,750 by way of meals for the volunteers).

28 FEB 1964
MADRAS

திரு. ஆ. கு. சுப்பையா: மற்ற இடங்களிலும் இம்மாதிரியான முறையில் தொண்டர் படை மூலம் உழைப்பு தானம் செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: ஏற்கனவே பொது மக்கள் பிரதிநிதிகள், சட்ட மன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள் ஆகியோர்களுடைய ஒத்துழைப்பு மூலம் அங்குள்ள மக்களை சிரமதானம் செய்வதற்கு ஊக்குவித்தால், திட்டம் வெற்றிகரமாக நடக்குமா என்பதை சர்க்கார் நல்ல முறையில் கவனித்து, அம்மாதிரியான திட்டத்தை ஊக்குவிப்பதற்கு முயற்சி எடுக்கும்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: கனம் தலைவர் அவர்களே, வேலை மதிப்பிற்கான ரூபாயை கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு செலவான தொகை எவ்வளவு என்று சொல்ல முடியுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: உழைப்பின் மதிப்பு ரூ. 15,000 போக, பண்ட வகையில் ரூ. 2,880-ம், தொண்டர்களுக்கு உணவு வகையில் ரூ. 3,750-ம்.

திரு. கரு. சீமைச்சாமி: மற்ற மாநிலங்களில் இந்தத் தொண்டர் படைக்கு துப்பாக்கிப் பயிற்சி, குதிரை ஏறும் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதே மாதிரி பயிற்சி நம் மாநிலத்திலும் அளிக்கப்படுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: நமது மாநிலத்தில் ஹோம் கார்ட்ஸுக்குத்தான் அம்மாதிரி பயிற்சி அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. மற்றபடி கிராமத் தொண்டர் படையினருக்கு அம்மாதிரி பயிற்சி அளிக்கப்படவில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம்: உணவுக்காகவும், மற்ற செலவுகளுக்காகவும் ஆன தொகையை அந்த மக்களே ஏற்றுக் கொண்டார்களா? அல்லது அரசாங்கமோ, பஞ்சாயத்தோ அதற்காக ஏதாவது செலவு செய்ததா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: சட்டமன்ற பிரதிநிதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஆகியோர்கள் சேர்ந்து வசதியுள்ள மக்களை அணுகி, அவர்களிடம் பணம் பெற்று செலவு செய்திருக்கிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: மற்ற பஞ்சாயத்து யூனியன்களை உற்சாகப்படுத்தும் வகையில், ஊக்குவிக்கும் வகையில், இவ்வளவு பாராட்டுக்குரிய பணி செய்த பஞ்சாயத்து யூனியனை பாராட்டுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: பொதுவாக இம்மாதிரி நல்ல காரியங்களில் கிராமத் தொண்டர் படையினரை ஈடுபடுத்திய பஞ்சாயத்து யூனியன், அதுவும் முதல் முதலாக இந்த நல்ல காரியத்தைச் செய்த பஞ்சாயத்து யூனியன் பாராட்டுக்குரியதுதான். இதில் ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

19th November 1963]

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தஞ்சை ஜில்லாவில் மற்ற வட்டார வளர்ச்சிப் பகுதியிலும் இதே போன்ற பணிகள் செய்தார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அம்மாதிரி தகவல் எனக்கு இல்லை.

கிராம உத்தியோகஸ்தர்கள் (பயணப்படி).

* 233 கேள்வி.—திரு. கோ. சி. மணி : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து வரி வசூல் சம்பந்தமாக அடிக்கடி கூட்டப்படும் கூட்டங்களுக்குப் போய்வர கிராம அதிகாரிகளுக்கு பிரயாணப்படி கொடுக்கப்படுகிறதா ?

(இ) அப்படியானால், எவ்வளவு ?

(உ) பஞ்சாயத்து வரியை வசூலிக்க கிராமத் தலைவர்களிடம் ஒப்படைத்த பிறகுதான் படி கொடுக்கப்படுகிறதா ?

(எ) முன்பிருந்தே கொடுக்கப்படுகிறதென்றால் இப்போது அவர்களுக்கு அதிகமான வேலையும் அடிக்கடி ரெவின்யூ அதிகாரிகள் கூட்டுகின்ற கூட்டங்களுக்குப் போய்விடுவதால் அதற்கு அதிகப்படியாக பிரயாணப்படியும் இனிமேலாவது கொடுக்கும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) ஐந்து மைலுக்கு அப்பாலுள்ள கிராமங்களிலிருந்து வரும் கிராம அதிகாரிகளுக்கு பஸ் அல்லது ரயில் கட்டணமும், எட்டு மணி நேரத்திற்கு மேல் வெளியே இருந்தால், தினசரிப் படி ரூ. 1-25 ந.பை. வீதம் கொடுக்கப்படுகிறது.

(உ) ஆம்.

(எ) எழுவில்லை.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : பஞ்சாயத்து யூனியன்களுக்கு கிராம முன்சீப்கள் தாங்களே நேரில் போகாமல் சிப்பந்திகளின் மூலம் வரிவசூலான தொகையை அனுப்பினால், அந்தத் தொகையை வாங்கிக்கொள்ள மறுப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அம்மாதிரி தகவல் இல்லை.

Allotment of funds to panchayats.

* 234 Q.—SRI V. S. S. MANI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) on what basis funds are allotted to panchayats through panchayat unions; and

(*b*) whether population is one of the factors taken into account?

THE HON. SRI S. M. A. MAJID : (*a*) & (*b*) A statement [a] is placed on the Table of the House.

---

[a] Printed as Appendix I on page 306–308.